Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 23, 2023

செவ்வாய்க்கிழமை ஜனவரி 24, 2023 | ஒளி: 08 கதிர்: 193 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

'கோரம்' இன்றி எடுக்கப்படும் தீர்மானம்

# செல்லாது செல்லாது

தேர்தல் ஆணைக்குழுவில் கோரம் (உறுப்பினர்களின் எண்ணிக்கை) இன்றி எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் செல்லுப்படியாகாது எனத் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா, தேர்தல் திகதியை ஊடகங்களுக்கு அறிவிப்பது அல்ல; அந்தத் திகதியை வர்த்தமானியில் வெளியிடுவதே சட்டமாகும் என்றார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தப்படும் என ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எனினும், தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியிடப்படவில்லை.

தேர்தல் திகதி குறிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தால். அதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எத்தனை பேர் தங்களுடைய விருப் பத்தை தெரிவித்தனர் என்பது தொடர்பில் மக்களுக்கு தெளிவான விளக்கத்தை பெற்றுக்கொள்ள

தொடர்ச்சி P2

## 7 சூழ்ச்சிகளும் தோல்வி



உள்ளூராட்சி சபைத் தேர்தலை தடுப்பதற்கு அரசாங்கம் கடந்த இரண்டரை மாதங்களில் 7 தடவைகள் சூழ்ச்சிகளை மேற்கொண்ட போதும் அவை அனைத்தும் தோல்வியடைந்துள்ளதாக சுதந்திர ஜனதா சபையின் அழைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை எனவும், தேர்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில் புதிய தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க முற்பட்டால் அது அரசியல் நெறிமுறைகளுக்கு அமையாது என்றார்.

தேர்தல் தினத்தை பெயரிடும் போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் அங்கு இல்லை என்ற வாதத்தை அரசாங்கம் எழுப்பினாலும் அது மிகவும் பழங்குடி மற்றும் காலாவதியான வாதமாகும் என ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை நியமிப்பது ஒன்றே இத்தேர்தலின் நோக்கமல்ல. அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்க இதுவே சிறந்த சந்தர்ப்பம் எனவும் தெரிவித்தார்.

தேர்தல் முடிவு வந்தவுடன் பாராளுமன்றத்தை கலைக்கும் மக்கள் அலை உருவாகும் என்பதை அறிந்தும், அதற்கு நிதியமைச்சின் செயலாளருக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால், பொய்யான வாதங்களை முன்வைத்து தேர்தலை நடத்தாமல் இருக்க அரசாங்கம் முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எரிவாயு சிலிண்டர் விலை மீண்டும் அதிகரிக்கும்?




உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் அதிகரிக்கலாம் என்று லிட்ரோ எரிவாயு நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதாந்தம் 5ஆம் திகதிகளில் எரிவாயு விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படும் நிலையில், பெப்ரவரி மாதம் 500 ரூபாய் முதல் 750 ரூபாயால் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை அதிகரிக்கப்படும் என்று அறியமுடிகிறது. தொடர்ச்சி P2

## சவுதி பயணமானார் அமைச்சர் அலிசப்ரி



வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, சவூதி அரேபியாவுக்கு திங்கட்கிழமை (23) பயணமானார்.

சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பிரகாரம் அவர் பயணமாகியுள்ளார். தொடர்ச்சி P2



அரச ஊழியர்களுக்கு

## தாமதமின்றி சம்பளம் வழங்கப்படும்

அரச ஊழியர்களின் சம்பளம், நாளை 25ஆம் திகதி வழமை போன்று தாமதமின்றி வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, திங்கட்கிழமை (23) உறுதியளித்தார். தொடர்ச்சி P2

## 2022 டிசெம்பர் மாத பணவீக்கம் சரிவு



தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் ஒட்டுமொத்த பணவீக்கமானது 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 59.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், திங்கட்கிழமை (23) தெரிவித்தது. தொடர்ச்சி P2

## ஒரு வாரம் போராட்டம்



அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்டுள்ள வரி சீர்திருத்தங்களுக்கு எதிராகவும் மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வு காணக் கோரியும் அரச வைத்திய அதிகாரிகள் திங்கட்கிழமை (23) ஆரம்பித்த போராட்டம் ஒருவாரத்துக்கு தொடருமென அறிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

## இலவச டீசலை விநியோகிக்க 12 கோடி ரூபாய் செலவாகும்



சீனாவால் இலவசமாக வழங்கப்பட்ட டீசலை விநியோகிப்பதற்கு 12.2 கோடி ரூபாய் வரை அரசாங்கத்துக்கு செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெல் அறுவடைக்காக சீனாவால் வழங்கப்பட்ட 6.8 மில்லியன் லீற்றர் டீசலை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் பணியை விவசாய அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

டீசலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விநியோகித்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், அதற்காக அரசாங்கத்துக்கு 12.2 கோடி ரூபாய் செலவாகும் என்றார். தொடர்ச்சி P2

## உ/த பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை தவிர்க்கவும்

### மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம்



ஜனவரி 23ஆம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரையான உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் காலப் பகுதியில் எந்நேரத்திலும் மின்வெட்டுகளைத் திட்டமிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

ஷாப்டரின் மரண விவகாரம்

## நீதவான் விசாரணையை அறையில் நடத்தியது ஏன்?

### திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார் மேலதிக நீதவான்



பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்தே, மரணம் குறித்த நீதவான் விசாரணை தனது உத்தியோகபூர்வ அறையில் நடத்த தீர்மானித்ததாக கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய திறந்த நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (23) அறிவித்தார். தொடர்ச்சி P2

## தொழுநோய் பரவுகிறது



15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களிடையே தொழுநோய் பரவி வருவதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் பதிவாகிய தொழுநோயாளர்களில் 10 சதவீதமானோர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என விசேட வைத்திய நிபுணர் இந்திக்கா கரவிட்ட தெரிவித்தார்.



## கைதிகள் நால்வர் பரீட்சைக்குத் தோற்றினர்

### மரண தண்டனை கைதியும் உள்ளடக்கம்

சிறை கைதிகளில் நால்வர், தற்போது நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ள கைதிகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதியும் அடங்குகின்றார்.

கலை பாடத்திலேயே அவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். புதிய மெகஸின் சிறைச்சாலையில் பரீட்சை மத்திய நிலையம் நிறுவப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



வரிக்கொள்கை உள்ளிட்டவற்றுக்கு எதிரான

## கறுப்பு வாரத்தின் முதல் நாளில் கடும் எதிர்ப்புகள்

### வைத்தியர்கள், வங்கி ஊழியர்கள் கறுப்புடன் எதிர்ப்பு

அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள் உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் தொழிற்சங்கங்களால் நேற்றையதினம் (23) பணிப்புறக்கணிப்பு மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

23ஆம் திகதி ஆரம்பிக்கும் வாரம், கறுப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதாக தொழில் வல்லுநர்கள் சங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. அதற்கு ஆதரவளிக்கும் வகையில், வைத்தியர்கள் பலர் கறுப்பு பட்டி அணிந்து தமது கடமைகளுக்கு சமுகமளித்திருந்தனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கறுப்பு வாரத்தை நேற்று காலை ஆரம்பித்து வைத்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், மருந்துப் பற்றாக்குறையை தீர்க்குமாறு கோரி மனுவொன்றில் கையொப்பம் திரட்டியது. தொடர்ச்சி P2

## அரசியலமைப்பு பேரவை புதன்கிழமை கூடும்

அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் நாளை புதன்கிழமை (25) மு.ப 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதாக பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அத்துடன், சபாநாயகர், பிரதமர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் சபாநாயகரால் பெயர்குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத நபர்களை அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கான நியமனம் அண்மையில் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

இதன்படி கலாநிதி பிரதாப் இராமானுஜம், தொடர்ச்சி P2



## வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்கு தரமான பணியாளர்களை அனுப்பத் திட்டம்

வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்கு தரமான தொழிலாளர்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) உபகுழு கவனம் செலுத்தியது.

தரம் மற்றும் திறமையான புலம்பெயர்ந்த தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு பரிந்துரைப்பது, அது சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமைச்சுகளுக்கிடையிலான குழுவால் தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தை தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எரிவாயு சிலிண்டர் விலை மீண்டும்...

2022ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த மாதம் சிலிண்டர் விலை குறைக்கப்பட்டிருந்ததது.

12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 201 ரூபாயால் குறைக்கப்பட்டு உள்ளதாகவும் 5 மற்றும் 2.3 கிலோ கிராம் சிலிண்டர்களின் விலைகளும் முறையே 80 மற்றும் 38 ரூபாய்களால் குறைக்கப்பட்டிருந்தன.

4,610 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 201 ரூபாயால் குறைக்கப்பட்டு, 4,409 ரூபாயாகவும் 1,850 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,770 ரூபாயாகவும், 860 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 822 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவுதி பயணமானார் அமைச்சர் அலிசப்ரி

சவுதியில் தங்கியிருக்கும் போது, இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில், மக்கா மற்றும் மதீனா நகரங்களின் ஆளுநர்களை சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் சவூதி பயணம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவடைகிறது.

# தாமதமின்றி சம்பளம் வழங்கப்படும்

நிறைவேற்று தரத்தில் இல்லாத ஊழியர்களுக்கான சம்பளம் 25ஆம் திகதி வழங்கப்படும் என்றும் நிறைவேற்று ஊழியர்களுக்கு 25 அல்லது 26ஆம் திகதி சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பளத்தை வழங்குவதற்கு தேவையான 93 பில்லியன் ரூபாய் நிதியில் 79 பில்லியன் ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரம் இல்லாத அரச ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்தை குறிப்பிட்ட திகதியில் வழங்கவும், நிறைவேற்று நிலை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை சில நாள்கள் தாமதப்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அண்மையில் அங்கிகாரம் வழங்கியது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல், தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனவரி முதல் அடுத்த சில மாதங்களில் அரச செலவினங்கள் சரியாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டுக்கான அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான புதிய முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்தது.

# 2022 டிசெம்பர் மாத பணவீக்கம் சரிவு



2022 ஒக்டோபரில் 70.6 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 65 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததாகவும் டிசெம்பரில் 59.2 சதவீதமாக மேலும் குறைவடைந்துள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மாதாந்த அடிப்படையிலான உணவுப் பணவீக்கம் 2022 நவம்பரில் 69.8 சதவீதமாக காணப்பட்ட நிலையில், 2022 டிசெம்பரில் 59.3 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

2022ஆம் ஆண்டு நவம்பரில் 60.4 சதவீதமாக இருந்த மாதாந்த அடிப்படையிலான உணவு அல்லாத பணவீக்கம் டிசெம்பரில் 59.0 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் குறைந்து காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் உணவு மற்றும் உணவு அல்லாத பணவீக்கம், 2022ஆம் ஆண்டு டிசெம்பரில் அதிகரித்த போக்கினை காண்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# செல்லாது செல்லாது

தேர்தல் திகதியை ஊடகங்களுக்கு அறிவிப்பது அல்ல; அந்தத் திகதியை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதே சட்டமாகும் என்றார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு பேரவை எதிர்வரும் 25ஆம் திகதி கூடவிருக்கின்றது. இந்நிலையில், தேர்தல் ஆணைக்குழுவும் நெருக்கடியான நிலையில் இருப்பதாக கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு கோரும் வர்த்தமானியில் தேர்தல் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐந்து பேரினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனபிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

தேர்தல் திகதியை தீர்மானித்தல் போன்ற முக்கிய பணிகளுக்கு முழு ஆணைக்குழுவும் தேவை என தெரிவித்த மஹாநாம ஹேவா, தேர்தல் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை எனக் கூறுவதன் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்துவது என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

# இலவச டீசலை விநியோகிக்க 12 கோடி ரூபாய் செலவாகும்

அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை விவசாயம் செய்யும் நெல் விவசாயிகளுக்கு டீசல் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இரண்டரை ஏக்கர் அல்லது ஒரு ஹெக்டேயரில் விவசாயம் செய்யும் விவசாயிக்கு 15 லீற்றர் எரிபொருள் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விவசாய அமைச்சின் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தேவையான பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவிடம் விவசாய அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# உ/த பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை தவிர்க்கவும்



மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதத்திலேயே ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

மின்வெட்டை தவிர்ப்பதன் மூலம் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் தங்களது கல்வி உரிமையை தடையின்றி பயன்படுத்த முடியும் என்று ஆணைக்குழு கோடிட்டுக் காட்டியுள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியில் அமலாகும் மின்வெட்டு அட்டவணை குறித்த அண்மைக்காலச் செய்திகளைக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்ட போதே ஆணைக்குழு இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது.

# அரசியலமைப்புப் பேரவை புதன்கிழமை கூடும்

வைத்தியகலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந்தர, கலாநிதி வெலிகம விதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலாநிதி இராமானுஜம், அரச சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்டிருப்பதுடன், ஒரு தசாப்தத்துக்கு மேலாக பல அமைச்சுகளின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தில்குஷி அனுலா விஜேசுந்தர துறைசார் வைத்திய நிபுணராவார். கலாநிதி தினேஷா சமரரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

# நீதவான் விசாரணையை அறையில் நடத்தியது ஏன்?

மரணம் தொடர்பான பல்வேறுபட்ட தகவல்கள் ஊடகங்கள் ஊடாக பரப்பப்பட்டு வருவதால் சாட்சிய விசாரணையை தனிப்பட்ட முறையில் நடத்துமாறு உயிரிழந்தவரின் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதாக மேலதிக நீதவான் சுட்டிக்காட்டினார்.

சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்த நீதவான், அவர்களின் கோரிக்கையை கருத்திற் கொண்டே சாட்சிய விசாரணையை தனது உத்தியோகபூர்வ அறையில் நடத்த தீர்மானித்தாக குறிப்பிட்டார்.

ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் குறித்த அரசாங்கத்தின் நிபுணர் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் நீதவான் அறிவித்தார்.

இந்த மரண விசாரணையுடன் தொடர்பான சாட்சிய விசாரணை நீதவானின் உத்தியோகபூர்வ அறையில் நடத்தப்பட்டதுடன், ஷாப்டரின் சகோதரரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

# ஒரு வாரம் போராட்டம்



கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் நேற்று (23) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளின் சிறு சுகாதார பணியாளர்களும் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கைதிகள் நால்வர் பரீட்சைக்குத் தோற்றினர்

இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாண சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர், தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றியுள்ளார். சாவக்கச்சேரியில் நிறுவப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்திலேயே அவர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

திங்கட்கிழமை (23) ஆரம்பமான பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, 331,709 பரீட்சார்த்திகள் தகுதிப்பெற்றுள்ளனர். அதில், 278,196 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். 53,513 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர். அத்துடன் விசேட தேவையுடைய 263 பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

2,200 மத்திய நிலையங்களில் நேற்று (23) ஆரம்பமான பரீட்சைகளை 25,151 அதிகாரிகள் கண்காணிக்கின்றனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(படம்: மலையகத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, பரீட்சை மத்திய நிலையத்துக்கு வெளியே காத்திருக்கும் பாடசாலை பரீட்சார்த்திகள்.)
(ரஞ்சித் ராஜபக்ஷ)



# கறுப்பு வாரத்தின் முதல் நாளில் கடும் எதிர்ப்புகள்

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிராக தமது அதிருப்தியை வெளிப்படுத்தி கறுப்பு வாரத்துக்கு ஆதரவு தெரிவித்த வங்கி ஊழியர்களுகம் கறுப்பு ஆடைகளை அணிந்து கடமைகளுக்கு சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை, வரிக் கொள்கைக்கு எதிராக துறைமுக தொழிற்சங்கங்களின் ஐக்கிய கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று (23) நடைபெற்றது.

திருடர்களை வைத்து வரி கட்டும் ரணில் ராஜபக்ஷவை ஒழிப்போம் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தி போராட்டம் இடம்பெற்ற நிலையில், போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும், கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் சிற்றூழியர்கள் 4 மணிநேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பணவீக்கம், போக்குவரத்துக் கொடுப்பனவு, மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், இலவச சுகாதார சேவைகளை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு, அதிகரித்துள்ள வங்கி வட்டி வீதத்தைக் குறைத்தல், கடுமையான ஊழியர் பற்றாக்குறை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**“ வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு வாரமாக இதனை அறிவித்து, பல்வேறு தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். எனவே, எந்தவிதமான அடிப்படையுமின்றி வரியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும்**

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை வங்கி சேவை சங்கத்தின் தலைவர் அநுராத நிராஜ், “வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு வாரமாக இதனை அறிவித்து, பல்வேறு தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். அந்த வகையில் வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு நிற ஆடைகளை அணிந்து இன்று பணிக்கு வந்திருக்கிறோம். எனவே, எந்தவிதமான அடிப்படையுமின்றி வரியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்கு தரமான பணியாளர்களை அனுப்பத் திட்டம்

மீளாய்வு செய்வதற்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உபகுழு அதன் தலைவர் வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடியபோதே இது பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டு தொழிலாளர் சந்தையை நோக்காகக் கொண்டு, தரமான பயிற்சிகளை வழங்குவதற்கு இதில் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுகளும் இணைந்து திட்டமொன்றைத் தயாரிக்குமாறு உபகுழு இதற்கு முன்னர் வழங்கிய பரிந்துரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. வெளிநாட்டுக்குச் செல்லும் பணியாளர்களுக்கான பயிற்சிகளை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்கெனவே தயாரித்து முன்னெடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பான பயிற்சிகளும் பிரசாரங்களும் ஏற்கெனவே கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

தேசிய தொழில் தகுதிச் சான்றிதழை (NVQ) மற்ற நாடுகளுடன் சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களை கடுமையாக கண்காணிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாடு செல்ல விரும்பும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் ஒழுக்கம் குறித்தும் குழு கலந்துரையாடியது.

வெளிநாட்டுக்குச் செல்லும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பை இந்த உபகுழுவின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தெரிவித்தார். இதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.

**“ வெளிநாட்டு தொழிலாளர் சந்தையை நோக்காகக் கொண்டு, தரமான பயிற்சிகளை வழங்குவதற்கு இதில் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுகளும் இணைந்து திட்டமொன்றைத் தயாரிக்குமாறு உபகுழு இதற்கு முன்னர் வழங்கிய பரிந்துரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. தேசிய தொழில் தகுதிச் சான்றிதழை (NVQ) மற்ற நாடுகளுடன் சீரமைப்பது குறித்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களை கடுமையாக கண்காணிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது**

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

அரசியலமைப்பு உரிமைகள் மீறப்படுவதாக ஆதிவாசிகள் தலைவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்த முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஆதிவாசிகள் சமூகத்தின் தலைவர் ஊறுவரிகே வன்னில அத்தோ, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

அரசியலமைப்பு அங்கிகாரம் இல்லாமை, சமூக - பொருளாதார, கலாசார மற்றும் குடியுரிமையை உறுதி செய்யும் வகையில் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமை, ஆதிவாசிகள் சமூகத்தின் பாரம்பரிய உரிமைகளுக்கு எந்தவித உணர்திறனும் இல்லாமல் சட்டம் அமலாக்கப்படுகின்றமை உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டி முறைப்பாடு செய்திருந்தார்.

சுற்றுச்சூழல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மஹாவெலி அபிவிருத்தி அதிகாரசபை, குடிவரவு, குடியகல்வு திணைக்களம், காணி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மீன்படி, கடலோர பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்டப் 10 அரச நிறுவனங்கள் தங்களது முறைப்பாட்டுக்குப் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனவரி 27ஆம் திகதி கூட உள்ளது.

# தேர்தல் கண்காணிப்பு பணிகள் ஆரம்பம்




நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கஃபே) தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதென கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீம் தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அந்த அடிப்படையில் தேர்தலுக்கு முன், தேர்தல் நேரத்தில் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியென 3 பிரிவுகளில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதென்றும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. எது எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழு தமக்கு வழங்கப்பட்டுள்ள வகிபாகத்தின் அடிப்படையில் தேர்தலை நடாத்துவதற்குரிய வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம்.


தேர்தல் கணிகாணிப்பு அமைப்பு என்ற ரீதியில் கஃபே அமைப்பும் இத் தேர்தல் பிற்போடப்படாமல் உரிய காலத்தில் நடாத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் வலியுறுத்தி வருகின்றோம் என்றார்.

குறிப்பாக இந்த தேர்தலில் பல பிரதான கட்சிகள் பிரிந்து வேறு வேறாகவும் கூட்டாகவும் சேர்ந்து போட்டியிடவுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதனால் பிரதேச மட்டத்தில் வட்டார ரீதியாக தேர்தலில் போட்டியிடக்கூடிய அதிகமான வேட்பாளர்கள் குறிப்பிட்ட குறைந்த வாக்காளர்கள் இருக்கக் கூடிய வட்டாரங்களில் போட்டியிடுவதனால் அவர்களின் பிரசார நடவடிக்கையின் போது வன் முறைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதானால் வன்முறைகள் அற்ற தேர்தலில் ஒன்றிணையுமாறு கஃபே அமைப்பு அனைத்து வேட்பாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது என்றார்.

தற்போது பெரும்பாலான மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினையில் இருப்பதானால் வாக்காளர்களுக்கு இலஞ்சம் பணம், பொருள் வழங்கும் வாய்ப்புகள் காணப்படுவதனால் இந்த இலஞ்ச வழங்கும் செயற்பாட்டை நிறுத்துவதற்கான கண்காணிப்பு பணிகளுக்கு கஃபே அமைப்பு முக்கியதுவத்தை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சட்டமா அதிபருக்கு சட்டமூலம் அனுப்பி வைப்பு



தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் செலவுகளை கட்டுப்பத்தும் ஏற்பாடுகளைக் கொண்ட தேர்தல் செலவீனத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டமூலமான, முன்வைக்கப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கி முறையாகத் தயாரிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சட்டமூலம் தயாரிக்கப்பட்டப் பின்னர் இந்த வாரத்திலேயே தனக்கு அனுப்பி வைக்கப்படுமென தெரிவிக்கும் சபாநாயகர், சட்டமூலம் கிடைத்ததும் அதனை சான்றுரைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தான் கையெழுத்திட்டப் பின்னரே இச்சட்டமூலம் அமலுக்கு வரும் எனவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

தான்தோன்றிதனமாக செயற்படும்

# "தவிசாளர்களை நீக்குவேன்"



உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைப் பெறும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் தாங்கள் நினைப்பது போல் நடந்து கொள்ள வாய்ப்பில்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சம்பிரதாய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் போல ஒப்பந்தம் செய்யவோ அல்லது பிற இலாபகரமான விடயங்களைச்செய்யவோ வாய்ப்பில்லை எனவும், மக்களுக்கு சேவையாற்றும் ஸ்மார்ட் உள்ளூராட்சி சபையே தேவை எனவும் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் நடவடிக்கைகள் இளைஞர் ஆலோசனைக் குழு மூலம் கண்காணிக்கப்படும் எனவும், மக்களுக்கு சேவையாற்றாவிடின் அவர்களை உடனடியாக நீக்குவதற்கு இருமுறை சிந்திக்க மாட்டோம் என்றார்.

இளைஞர்கள், பாடசாலை மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய, ஒவ்வொரு கிராமத்திலும் நூலகம் உருவாக்கப்பட்டு தகவல் மற்றும் தரவுகளை அணுக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இந்த அனைத்து வேலைத்திட்டங்களின் நோக்கமும் இலங்கையை உலகில் முதல் இடத்துக்கு ஸ்தானப்படுத்துவதே எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.









# விடுதலை செய்..

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்ய வலியுறுத்தி, மொனராகலையில் கையெழுத்து திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

(சுனசிறி குணதிலக)

# புதிய அமைச்சர்களை நியமிப்பது அநாவசியமான செலவாகும்




உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும்போது மின் வெட்டு அமல்ப்படுத்தக்கூடாது என தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன, நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் புதிய அமைச்சர்களை நியமிப்பது அநாவசியமான செலவு என்கிற கருத்து நாட்டில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், எத்தனை அமைச்சர்களை நியமிக்க வேண்டும் என்பது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரையில் அந்த எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, இன்னும் பல வெற்றிடங்கள் இருக்கிறன. அமைச்சர்களை இப்போது நியமிப்பது அநாவசியமான செலவு என கருத்து காணப்படுகிறது. இதனைப் புறக்கணிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள 9 மாகாணசபைகளுக்காக மாகாண சுகாதார அமைச்சர் பதவிகளில் இப்போது எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்பதற்காக அந்த செலவுகள் மிகுதியாகின்றன. அதனூடாக சுகாதாரத்துறைக்கு நன்மைகள் கிடைத்திருக்கிறதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

பொதுஜன பெரமுன எவரும் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என்றே எதிர்பார்த்தனர். எனினும், அதிகளவான எண்ணிக்கையானோர் இம்முறை எமது கட்சி சார்பாக போட்டியிடுகிறார்கள். போட்டியிடுபவர்களும் பொதுஜன பெரமுனவில் போட்டியிடப்போவதில்லை எனவும் கூறினார்கள். அதுவும் பொய்யாக்கப்பட்டுள்ளது என்றார்.

# பிரபாகரன், விஜேவீரவின் உயிர்கள் பெறுமதியானவை

பிரபாகரன், விஜேவீர ஆகியோரது உயிர்கள் பெறுமதியானவை என தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பெறுமதியான உயிர்களை நாடு இழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்போது அவசியமானது உள்ளூராட்சி மன்ற தேர்தல் அல்ல. நாடு முகங்கொடுத்துள்ளப் பிரச்சினைகள் இதுவரையில் தீரவில்லை. தொடர்ந்து பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன.

QR முறையின் கீழ் எரிபொருள்கள் கிடைத்தாலும், பொருள்களின் விலைகள் சற்றுக் குறைக்கப்பட்டுள்ளன. அதுபோல சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு மெதுவாக வருகைத்தர ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான நிலையில் நாட்டை நாசம் செய்தால், உங்களது எதிர்காலமும் நாசமடையும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இத்தேர்தலில் ஒற்றுமையுடன் போட்டியிட வேண்டும். தேசிய ஒற்றுமை அவசியம். பழைய அரசியல் முறைமை இப்போது பயனற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பழையக் கொள்கைகளை வைத்துகொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. புதிய வேலைத்திட்டங்கள், புதியக் கொள்கைகள் அவசியம் என்றார்.

# கறுப்பு ஆடையை அணிந்து இலங்கை வங்கி ஊழியர்கள் எதிர்ப்பு

வரி அதிகரிப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இலங்கை வங்கி சேவை ஊழியர்கள் திங்கட்கிழமை (23) கறுப்பு ஆடை அணிந்து இலங்கை வங்கியில் கடமைகளில் ஈடுபட்டனர்.

மாதச் சம்பளமாக 1 இலட்ச ரூபாயை பெறும் ஊழியர்களிடமிருந்து வரியை அறிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இவ்வாறு கறுப்பு ஆடை அணிந்து வங்கி ஊழியர்கள் வருகைத்தந்திருந்தனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை வங்கி சேவை சங்கத்தின் தலைவர் அநுராத நிராஜ், "வரி அதிகரிப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு வாரமாக இதனை அறிவித்து, பல்வேறு தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். அந்த வகையில் வரி அதிகரிப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு நிற ஆடைகளை அணிந்து இன்று சேக்கு வந்திருக்கிறோம்" என்றார்.

"எனவே, எந்தவிதமான அடிப்படையுமின்றி வரியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

# சுதந்திர தினத்துக்கு ஹிருணிகா எதிர்ப்பு

## எதிர்ப்பை தெரிவிக்க மக்களுக்கும் அழைப்பு



காலி முகத்திடலில் 75ஆவது சுதந்திரத்தினத்தைக் கொண்டாடுவதற்காக அமைக்கப்பட்டு வரும் இடத்துக்கு சென்று அங்குள்ள இரும்பு தூண்களில் கறுப்புப் பட்டிகளை கட்டி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருஹிகா பிரேமசந்திர எதிர்ப்பு தெரிவித்தார்.

பெரும் சிரமங்களுக்கு நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், 75ஆவது சுதந்திரத் தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெறுகின்றன. ஆகையால், நாட்டு மக்கள் இந்த இடத்துக்கு கறுப்புப் பட்டிகளை அணிவித்து தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்த வேண்டும். நாட்டு மக்களை இந்நிலைக்கு தள்ளிய ரணில் -ராஜபக்ஷக்கள் இந்த இடத்தில் அமர்ந்துகொண்டு சுதந்திரத் தினத்தை கொண்டாட தயாராக வருகிறார்கள் எனவும் குற்றஞ்சுமத்தினார்.

# நீர் கட்டணப் பட்டியலில் புதிய மாற்றம்

■ மு.தமிழ்ச்செல்வன்



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது நீர் இணைப்பை பெற்றுள்ளதனது வாடிக்கையாளர்களுக்கு மாதாந்தம் அச்சிடப்பட்ட பெரியளவிலான தாள்களில் வழங்கி வந்த மாதாந்த நீர்க் கட்டணப்பட்டியலை, அச்சிடப்பட்ட இயந்திர பிரதியாக வழங்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அந்தந்த இடங்களில் வைத்தே அச்சிடப்பட்ட இயந்திரப் பிரதி வழங்கப்படும் எனவும் இது உத்தியோகபூர்வ கட்டணப்பட்டியல் எனவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

சூழலுக்கு நட்பாக இருத்தல், மற்றும் வாடிக்கையாளர்கள் இலகுவாக கையாள்வது, செலவுகளை கட்டுப்படுத்தல், போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு இந்த புதிய முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

*Mobile Point of Sale Machine* இயந்திரம் ஊடாக நீர் இணைப்பு உள்ள அந்தந்த இடங்களிலேயே மாதாந்த நீர்க்கட்டணப் பட்டியல் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக முழுமையான பட்டியலை பெற விரும்புகின்ற வாடிக்கையாளர்கள் மின்னஞ்சல் மூலம் ஈ பட்டியலை ( E-Bill) பெற்றுக்கொள்ள முடியும் அத்தோடு எஸ்.எம்.எஸ் ஊடாகவும் கட்டண விபரங்கள் அனுப்பப்பட உள்ளன.

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2023 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** மொக்டிஜிட்டல் ஏசியா பெசிபிக் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர்:** பிரெனன் எஸ் எல் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** பீ வி 71692

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** ஒரியன் சிட்டி இல. 752/5, கலாநிதி டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**

தமிழரின் பண்பாடு, பாரம்பரியம், அடையாளம் பேண வேண்டிய

# பொறுப்பு பாடசாலைக்கு உள்ளது

## பொங்கல் விழாவில் கல்முனை பற்றிமா அதிபர் சகோ. சந்தியாகு

■ வி.ரி சகாதேவராஜா

தமிழரின் பண்பாடு, பாரம்பரியம், அடையாளம் போன்றவற்றை அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டிய பொறுப்பு, அவர்கள் சார்ந்த பாடசாலைகளுக்கும் உள்ளது என்று கல்முனை பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் சகோ. சந்தியாகு செபமாலை தெரிவித்தார்.

பற்றிமா கல்லூரியின் தைப்பொங்கல் திருவிழா, பாரம்பரிய முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. மாட்டு வண்டிலில் பொங்கலுக்கு உரிய பொருட்கள் அனைத்தும் பற்றிமா பெண்கள் பிரிவிலிருந்து ஊர்வலமாக ஆண்கள் பிரிவுக்கு கொண்டுவரப்பட்டன.

அங்கு புதுப்பானையில் புத்தரிசி கொண்டு பொங்கல் இடம் பெற்றது. அதிபர் சகோ. சந்தியா அடிகளாருக்கு தலைப்பாகை கட்டி, பொங்கல் பானைக்கு பால் ஊற்றினார்கள். சிறப்பு அதிதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மின்சார சபை பொறியாளர் வி.ரி சம்பந்தர் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அதிபர் சந்தியாகு மேலும் பேசுகையில், இன்று தமிழர்களின் உடை என்ன, அவர்களின் பாரம்பரியம் என்ன என்பது தெரியாமல் பலர் இருக்கின்றார்கள். அதேபோன்று, தைப்பொங்கலின் முக்கியத்துவம் என்ன, அதன் பாரம்பரியம் என்ன என்பது தொடர்பாக எதிர்கால சந்ததிக்கு அதனை முறைப்படி எடுத்துக்காட்டாக புரிந்துகொள்ளும்படி நடந்துகொள்ள வேண்டும். இதில் கணிசமான பங்கு பாடசாலைகளுக்கும் உண்டு என்றார்.

விழாவில், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன.





## பற்றிமா கல்லூரி பொங்கல் விழா



கல்முனை பற்றிமா தேசிய கல்லூரியின் பொங்கல் விழா, அதிபர் சகோ. சந்தியாகு செபமாலை தலைமையில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு அதிதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மின்சார சபை பொறியாளர் வி.ரி சம்பந்தர் கலந்து சிறப்பித்தார்.
வி.ரி சகாதேவராஜா

# மட்டக்களப்பில் 145 வேட்பு மனு தாக்கல்

## ஆறு வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு 145 வேட்பு மனுக்கள் தாக்குதல் செய்யப்பட்டுள்ளன. இதில், இரண்டு அரசியல் கட்சிகள், நான்கு சுயேச்சைகள் உட்பட ஆறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகிய இருகட்சிகளும் வேட்புமனுதாக்கல் செய்யவில்லை என மாவட்ட உதவி தெரிவத்தாட்சி ஆணையானர் எம்.பி.எம் சுபியான் நேற்று முன்தினம் (22) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபைக்கும் நகரசபைகளான காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் பிரதேச சபைகளான ஓட்டமாவடி, வாகரை, வாழைச்சேனை, கிரான், ஏறாவூர், வவுணதீவு, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை ஆகிய 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுதாக்கல் இடம்பெற்றது.

இதில் தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட பல சுயேச்சைக் குழுக்கள் உட்பட 145 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியினர் வேட்பு மனுதாக்கல் செய்வதற்கு 12.15 மணிக்கு கச்சேரிக்கு வந்த நிலையில் அவர்களை உள்ளேவிடவில்லை. அதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினர், வேட்பாளர் பட்டியலை கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு எடுத்துக்கொண்டு வந்திருந்தபோது, வாகனம் விபத்தில் சிக்கியதால் பிற்பகல் இரண்டு மணிக்கே கச்சேரிக்கு வரமுடிந்த காரணத்தால் வேட்பு மனுதாக்கல் செய்யமுடியாமல் போயுள்ளதாக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் தெரிவித்தார்.





காத்தான்குடியில்

# பாதணி உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

புதிய காத்தான்குடி தெற்கு 167சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உருவாக்கப்பட்டுள்ள சௌபாக்ய உற்பத்தி கிராமத்தின் திட்டத்தின் கீழ் பாதணி உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் நேற்று (23) காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய சிறீதரால் திறந்து வைக்கப்பட்டது.


சௌபாக்ய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பத்து மில்லியன் ரூபாய் பெறுமதியான நவீன இயந்திரங்களைக் கொண்டு, இந்தப் பாதணி உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**“ சௌபாக்ய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பத்து மில்லியன் ரூபாய் பெறுமதியான நவீன இயந்திரங்களைக் கொண்டு, புதிய காத்தான்குடி தெற்கு 167சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் இந்தப் பாதணி உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது**

இதன் ஆரம்ப வைபவத்தில், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான முஹம்மட் இர்பான், முஹம்மட் இர்ஸாத், முஹம்மட் நழீம் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# விசேட கொடுப்பனவுகள்

■ எம்.எஸ்.எம் ஹனீபா



மாற்றுத்திறனாளிகள், நீண்டகாலம் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு, ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான நான்கு மாத காலத்துக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்றாஸ் நேற்று (23) தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளி, சிறு நீரக நோயாளி கொண்ட குடும்பத்துக்கு மாதாந்தம் வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாய்க்கு மேலதிகமாக 2,500ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மாற்றுத்திறனாளி, சிறுநீரக நோயாளர் உள்ள காத்திருப்புப் பட்டியல் குடும்பத்துக்கு ஐயாயிரம் ரூபாய் விசேட உதவித் தொகை வழங்கப்படும். காத்திருப்போர் பட்டியல் குடும்பங்களின் எண்ணிக்கை டிசெம்பர், 2022 இன் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இயலாமையின் காரணமாக வங்கியில் வந்து பணத்தைப் பெற முடியாத பயனாளிகளுக்கு, சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக பயனாளிகளின் வீடுகளுக்கு கொண்டு சென்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பன்றி, கோழி பண்ணைக்கு எதிராக

# நீதிமன்ற நடவடிக்கை

■ எஸ். தில்லைநாதன்

மக்கள் குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத மான முறையில் அமையப்பெற்றிருந்த பன்றி, கோழி பண்ணைகளை அகற்றக் கோரி நேற்று முன்தினம் (22) மறவன்புலவு - தனங்கிளப்பு மக்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தனங்கிளப்பு, மறவன்புலவு கிராமங்களின் நடுவே இந்தப் பண்ணை அமைந்துள்ளது. இந்தப் பண்ணையில் வளர்க்கப்படும் பன்றிகளுக்கு உணவாக மருத்துவமனை கழிவுகள், உணவக கழிவுகள், இறைச்சி, மீன் கடைகளின் கழிவுகள் வழங்கப்படுகின்றன.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் பன்றிகளுக்கு போடப்படும் உணவு கழிவுகளை, காகங்கள் தூக்கி வந்து கிணறுகளுக்குள்ளும், வீட்டு முற்றங்களிலும் போடுவதாகவும் இதனால் மக்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்றும் எழுத்து மூலமாக பல முறை அதிகாரிகளுக்கு முறையிட்ட போதிலும் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே பண்ணை முன்பாக ஒன்று கூடிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த சாவகச்சேரி பொலிஸார், பண்ணையின் நிலைமைகளை அவதானித்துடன் மக்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று, பண்ணையின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பண்ணைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள, முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.





## மாட்டு வண்டி சவாரி



கிளிநொச்சி, அக்கராயனில் மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன்தினம் (22) நடைபெற்றுள்ளது. அக்கராயன் சவாரித் திடலில், அக்கராயன்குளம் கிளை சவாரி சங்கத்தால் நடத்தப்பட்ட இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.
நடராசா கிருஸ்ணகுமார்



யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின்

# பெரும் போக அறுவடை விழா

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வவுனியா, கனகராயன் குளத்தில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த விவசாய பண்ணையில் பெரும் போக அறுவடை விழா நடைபெற்றது.

பல்கலைகழக விவசாய பீட பீடாதிபதி சீவரத்தினம் வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார். குறித்த நிகழ்வில் விவசாய பீட திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




# தர்மலிங்கத்தின் திருவுருவ சிலை திறப்பு

■ நிதர்சன் வினோத்



உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்று (23) வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்பாக நடைபெற்றது.

நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போராசிரியர் சி. சிறிசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

குறித்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமசந்திரன், எம்.கே சிவாஜிலிங்கம், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. கஜதீபன், பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னாரில் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு

# 16 கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் களத்தில்

■ மன்னார் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஆகியவை இணைந்து வேட்புமனு தாக்கல் செய்துள்ளன. மேலும் இலங்கை தமிழரசு கட்சி, ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

மன்னார் நகர சபைக்கு 10 கட்சிகளும் ஒரு சுயேட்சைக் குழு உள்ளடங்களாக 11 பேரும், மன்னார் பிரதேச சபைக்கு எட்டு கட்சிகளும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக ஒன்பது பேரும் நானாட்டான் பிரதேச சபைக்கு 12 கட்சிகளும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு ஒன்பது கட்சிகளும் முசலி பிரதேச சபைக்கு 12 கட்சிகளும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 13 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

விழியல் ஆடை தொழிற்சாலையால்

# மீள்காடாக்கல் செயற்றிட்டம்



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, புத்து வெட்டுவான், முதிரைச் சோலை பகுதியில் கிரவல் அகழப்பட்ட 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5,773 மரக்கன்றுகளை விடியல் ஆடை தொழிற்சாலையால் மீள்காடாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறித்த இடங்களில் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டு, மண் அகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. இந்த நிலையில், அறிவியல் நகரில் இயங்கி வரும் விடியல் ஆடை தொழிற்சாலையின் சமூக நலத் திட்டத்தின் மீள்காடாக்கல் திட்டத்தின் கீழ், 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5,773 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# மாட்டுத் திருடன் மடக்கிப் பிடிப்பு

■ செந்தூரன் பிரதீபன்

வளர்ப்பு மாடுகளை திருடி வந்த இறைச்சி வியாபாரி கையும்மெய்யுமாகப் பிடிபட்டார். மேச்சலுக்காக கட்டப்பட்ட மாடுகளைக் குறிவைத்து, திருடி வந்துள்ளமை கண்டறிக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட மாடுகளையே திருடி வந்துள்ளான். கன்றுத் தாச்சி மாடுகள், கோவில் மாடுகளைக் கூட விட்டு வைக்காமல் திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாடுகளை எங்கு கொண்டு செல்கின்றார் எனப் பொலிஸார் ஆராய்ந்த பொழுது, அவை மாடு வெட்டும் கொல்களத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை கண்டறிக்கப்பட்டது.



மொனராகலை வைத்தியசாலையின்

# சுகாதார உதவியாளர்கள் கடமைகளிலிருந்து விலகினர்

## வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்பு

**சுமணசிறி குணதிலக்க**

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார உதவியாளர்கள் திங்கட்கிழமை (23) நான்கு மணித்தியாலங்கள் கடமைகளிலிருந்து விலகிச் சென்றமையால் வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் காணப்படும் மருந்து, உபகரண தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கவும், கட்டண வார்டுகளை உருவாக்குவதை நிறுத்தவும் பணியாளர் பற்றாக்குறைக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உதவியாளர்கள் கடமைகளிலிருந்து விலகியிருந்தனர்.

இந்தச் சுகாதார உதவியாளர்கள் நேற்று (23) காலை எட்டு மணிக்கு கையெழுத்து பதிந்து விட்டு, கடமைகளிலிருந்து விலகிச் சென்றனர். இதனால் வைத்தியசாலையின் வெளிநோயாளர்களும், கிளினிக்குகளுக்கு மாதாந்தம் வருபவர்களும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

இது தொடர்பில் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியிடம் கேட்ட போது, இந்த நடவடிக்கையில் சுமார் 322 சுகாதார உதவியாளர்கள் ஈடுபட்டுள்ள நிலையில், திடீர் சிகிச்சையாளர்கள் மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு எவ்வித சிரமங்களும் இன்றி சிகிச்சைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.



# பாலத்தில் வழிவிட்ட லொறி பள்ளத்தில் விழுந்தது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு வழியை விடுவதற்காக ஒதுங்கிய லொறி, ஆற்றில் விழுந்த சம்பவம், ஞாயிற்றுக்கிழமை (22) கொட்டகலையில் பதிவாகியுள்ளது.

இதன்போது லொறியின் சாரதியும் உதவியாளரும் காயமடைந்து டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என திம்புள்ள-பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை-யதன்சைட் தோட்டத்துக்கு செல்லும் வீதியிலேயே இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யதன்சைட் தோட்டத்திலிருந்து கொட்டகலை நகருக்கு சென்று கொண்டிருந்த லொறி, எதிர்திசையில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு பாலத்தின் மத்தியில் இடமளிக்க முற்பட்ட போது, பாலத்தின் கீழே 20 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது.

அந்த லொறியில் மேலுமிருவர் பயணித்துள்ள நிலையில், அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில்

# 3 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

**மஹேஸ் கீர்த்திரத்ன**

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளில் 90 பேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் இதில் 3 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் மாத்தளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி தேஜானி திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மாத்தளை மாநகர சபை, தம்புளை நகர சபை மற்றும் 11 பிரதேச சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 90 வேட்பு மனுக்களில் 87 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 03 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் சுயாதீன குழுவொன்றால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வேட்புமனுக்களும் கலேவெல பிரதேச சபைக்காக ஐக்கிய தேசிய முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவொன்றும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தம்புள்ளை மாநகர சபைக்கு 05 கட்சிகளும் 01 சுயேச்சைக் குழுவும், மாத்தளை நகர சபைக்கு 08 அரசியல் கட்சிகளும், பல்லேபொல பிரதேச சபைக்கு 06 அரசியல் கட்சிகளும், கலேவெல பிரதேச சபைக்கு 07 கட்சிகளும், தம்புள்ளை பிரதேச சபைக்கு 06 கட்சிகளும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளன.

நுவரெலியா மாவட்ட வேட்பு மனுக்களில்

# 17 நிராகரிப்பு

## 108 வேட்பு மனுக்கள் தாக்கல்

**எஸ்.கணேசன், எம்.குமார்**

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள 12 சபைகளுக்கும் தாக்கல் செய்யப்பட்ட 108 வேட்பு மனுக்களில் 17 நிராகரிக்கப்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான நந்தன கலபட தெரிவித்தார்.

இதற்கமைய அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் 85 வேட்புமனுக்கள், சுயேட்சைக்குழுக்களின் 6 வேட்பு மனுக்கள் உள்ளடங்கலாக 91 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா மாநகர சபைக்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த 10 வேட்பு மனுக்களில் சுயேட்சைக்குழுவொன்றின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொட்டகலை பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 11 வேட்பு மனுக்களில் சுயாதீன அணியொன்றினதும் (செந்தூரன்), அபிநவ நிதாஸ் பெரமுனவினதும், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, சுதந்திர மக்கள் கூட்டணி, தேசிய ஜனநாயக முன்னணி உள்ளடங்கலாக 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நோர்வூட் பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 10 வேட்பு மனுக்களில் மூன்றும், நுவரெலியா பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 10 வேட்பு மனுக்களில் இரண்டும், ஹங்குராங்கெத்த பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 8 வேட்பு மனுக்களில் ஒரு வேட்பு மனுவும் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 9 வேட்பு மனுக்களில் லங்கா சமசமாஜக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வலப்பனை பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 9 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 9 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், கொத்மலை பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 6 வேட்பு மனுக்களில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 12 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் - டிக்கோயா நகர சபைக்காக முன்வைக்கப்பட்ட 7 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல தலவாக்கலை, லிந்துலை நகர சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட 07 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.





## உற்சாகத்துடன் சென்றனர்

நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள 2,200 பரீட்சை நிலையங்களில் நேற்று (23) ஆரம்பமான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் தோற்றுவதற்காக பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பரீட்சை நிலையங்களுக்குச் சென்றனர். (ரஞ்சித் ராஜபக்ஷ)

தனியார் மற்றும் பாடசாலை சேவை வாகனங்கள்

# 21 காரணங்களை வைத்து திடீர் சோதனை

**ரஞ்சித் ராஜபக்ஷ**



ஹட்டனில் தனியார் மற்றும் பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் பஸ்கள், வான்கள் என்பன திங்கட்கிழமை (23) திடீர் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

ரதல்லையில் இடம்பெற்ற வாகன விபத்தின் பின்னர் ஹட்டன் பிரதேசத்திலிருந்து குறுகிய மற்றும் நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்கள், ஹட்டன் மற்றும் ஹட்டனை அண்மித்த பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பாடசாலை வாகனங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் எஸ்.எம்.டி.வி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் 21 காரணங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதென தெரிவித்த அவர், அந்தக் காரணங்களுக்கு மாறாக செயற்பட்ட தனியார் பஸ்களை சேவையிலிருந்து நிறுத்தவும் நடவடிக்கை எடுத்ததாகக் குறிப்பிட்டார்.

குறித்த வாகனங்களில் காணப்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் மோட்டார் வாகன பரிசோகரிடம் காண்பிக்குமாறும் அதுவரை வாகனங்களின் வருமான பத்திரத்தை பொலிஸ் பொறுப்பில் வைத்திருக்குமாறும் வாகன பரிசோதகரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக உபகரணங்களை அகற்றி, அதனையும் பொலிஸ் போக்குவரத்து பிரிவினரிடம் காண்பிக்குமாறும் தெரிவித்த நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் எஸ்.எம்.டி.வி சேனாநாயக்க சிறந்த, பாதுகாப்பான பயணிகள் சேவையை முன்னெடுப்பதற்கான இவ்வாறான சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றார்.





## சமத்துவ பொங்கல்

மலைதேச எழுச்சி இளைஞர் ஒன்றியம் ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா உடப்புஸல்லாவ, எனிக் மேல்பிரிவு நூலக கட்டடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பகுதிக்கான கிராம அபிவிருத்தி அதிகாரி எ.சிவனேசன் மற்றும் உடப்புஸலாவ பொலிஸ், ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் தோட்ட பொது மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.
(ஆ. ரமேஸ் )

# பதுளையில் நிச்சயம் மாற்றம் நிகழும்

## லெட்சுமனார் சஞ்சய் தெரிவிப்பு

**நிலமேகம் பிரசாந்த்**



இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பதுளை மாவட்டத்தில் மிகப்பெரிய மாற்றம் நிகழுமென மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கமான மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மக்கள் தங்கள் பலத்தை காட்ட தயாராகிவிட்டனர்.வெறும் வாய்வார்த்தைகளையும் பொய் வாக்குறுதிகளையும் கூறி ஏமாற்றி வாக்குகளை சூறையாடி, மக்களை கைவிட்டவர்களை மக்கள் நன்றாக இனம் கண்டு கொண்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தாக்கம், பொருளாதார வீழ்ச்சி ஆகிய பிரச்சினைகளில் மக்கள் துவண்ட போது, மக்களின் கண்ணீரை துடைத்தவர்கள் யார், கைகழுவியவர்கள் யாரென்பதை மக்கள் நன்றாக இனங்கண்டு கொண்டனர். எனவே இம்முறை பிரதேச சபை தேர்தலில் களத்தில் நின்று சேவை செய்தவர்களும் மக்களுக்கு கைகொடுத்தவர்களும் மாத்திரமே வெற்றிபெற முடியும்.

அந்தவரிசையில் பல வேலைத்திட்டங்களை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஸ்ணன் முன்னெடுத்துள்ளார்.

எனவே, இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பதுளையில் மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் அமோக வெற்றியீட்டுவார்கள் என்பது நிச்சயம் என்றார்.

# குட்டித்தேர்தலும் வேட்பாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமா, இல்லையா என்பது தொடர்பில் ஒரு நிச்சயமற்ற நிலைமை காணப்பட்ட நிலையில், மார்ச் 09 ஆம் திகதியை வாக்களிப்புக்கான நாளாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. வேட்பு மனுத்தாக்கல் 21ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது. ஏகப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பதவிக்காலம் நிறைவடைந்து ஒருவருடம் ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு வேட்பு மனுக்களைக் கோரியிருந்தது. நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையில், இவ்வாறானதொரு தேர்தல் அவசியமில்லை என்பதே ஆளும் தரப்பினரின் வலியுறுத்தலாகும்.

எனினும், ஏதோவொரு வகையில் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியிலேயே அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ள எதிர்க்கட்சிகள், அதனோர் அங்கமாகவே தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தையும் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொண்டுள்ளது என்கின்றன.

இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் அது சட்டமாகவேண்டுமாயின் சபாநாயகர் கையொப்பமிடும் அன்றைய தினத்தில் இருந்தே சட்டமாகும். எனினும், திருத்தங்களை உள்ளடக்கி, முறையாக ஒழுங்குப்படுத்துவதற்காக, சட்டமா மற்றும் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அந்தச் சட்டமூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளின் போது, நிதி வளங்களின் தேவையற்ற செல்வாக்கை தடுக்கும் வகையிலேயே இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள உபாயமென எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இந்தச் சட்டமூலத்தில் கைச்சாத்திடுவதற்கு ஒருவாரகாலம் எடுக்குமென சபாநாயகர் அறிவித்துள்ளார். அது சட்டமாக்கப்பட்டதன் பின்னர், அதனை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் அமல்படுத்த அரசாங்கம் விரும்பினால், தேர்தல் இன்னும் தாமதமாகுமென தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எவ்வாறெனினும், தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை பெறுவதற்கு உயர்நீதிமன்றத்தை அரசாங்கம் நாடவிருப்பதாகவும் அறியமுடிகின்றது. மக்களின் ஜனநாயக உரிமைகளில் ஒன்றாக வாக்களிக்கும் உரிமையை எவரும் தட்டிப்பறிக்க முயலக்கூடாது என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இதற்கிடையே, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்ளுக்கு தேர்தல் ஆணைக்குழு நிபந்தனைகளை விதித்துள்ளது.

பிரசார அலுவலகங்கள் தொடர்பில் அந்தந்த பிரதேச கிராமசேவகர் ஊடாக, மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்துக்கும் பிரதேச பொலிஸ் நிலையத்துக்கும் அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் சுயேட்சை குழுவும், ஓர் உள்ளூராட்சி சபைக்காக ஓர் ஊடக அலுவலகத்தை மாத்திரமே நிறுவ முடியும். அரச அலுவலகங்களைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்ததன் பின்னர், பிரசாரம் சூடுபிடிக்கும். எனினும், உயர்தரப்பரீட்சை ஆரம்பித்துள்ளமையால், பரீட்சார்த்திகளுக்கு இடையூறு விளைவிக்காது பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன், சுற்றாடலுக்கு தீங்கிழைக்காத வகையில், பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது சகலரதும் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பாசத்தை சுயநலனுக்காகக் கையில் எடுத்தலாகாது. ஒருசிலர் தங்கள் பேச்சாலேயே தமக்கு வேண்டியவர்களைச் சிறையில் அடைப்பதுபோல் வசப்படுத்தி விடுவார்கள். பேச்சாலேயே ஸ்தம்பிக்கச் செய்துவிடுகின்றார்கள்.

ஒருவர் விரும்பிச் செய்யும் செயலை, உள்ளத்தில் கொளுந்துவிட்டு எரியும் பொறாமைத் தீயை மறைத்துக் கொண்டு, இனிமையாகப் பேசி, தம்வசப்படுத்தி தடுத்துவிடுகின்றனர்.

எவரை நம்புவது, எவரை நம்பாமல் புறக்கணிப்பது என்பது புரியாமல் இருக்கின்றது எனப் பலர் சொல்வதுண்டு. ஏமாற்றினால்த்தான் வாழமுடியும் என எண்ணுபவர்கள் பாவத்தின் உறுப்பினராகின்றனர்.

உலகத்தை சரியாக அளக்க முடியாது. ஆனால், அமைதியாக இருந்து, உலகத்தை நோக்கினால், எதிலும் இருந்து தப்பித்துவிடலாம்.

மனதைக் கண்டபடி அலையவைக்கக்கூடாது. புலனடக்கத்தை உண்டுபண்ண தியானம், யோகாசனம் அவசியமாகும். மேலும், உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியமாகும். ஆழ்ந்த தூக்கம், அதிகாலை எழுந்து, காலைக்கடன்களை முடித்து, இறைவனை வணங்குதல் அமைதியை அளிக்கும்.

காலையில் சந்தோசத்துடன் எழுந்திடுக. சுகாதார விடயத்தில் தூய்மை அவசியம். முழுமையான மனிதன் உலகை உயர்த்துகின்றான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

நீதிமன்றுக்கு வந்துள்ள

# கல்முனை, சாய்ந்தமருது விவகாரம்

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமா அல்லது இடையில் ஏதாவது தடைகள் ஏற்பட்டு வாக்கெடுப்பு தள்ளிப் போகுமா என்ற ஊகங்களை எல்லாம் மீறி, தேர்தல் திகதி மார்ச் 09 என அறிவிக்கப்பட்டுள்ளது. வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்து விட்டது.

சோம்பேறிகளுக்கு உற்சாகம் பிறந்தது போல, வேட்பாளர்கள் இயங்கத் தொடங்கியுள்ளனர். தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இனி பொய்களுக்கும் புழுகு மூட்டைகளுக்கும் பஞ்சமிருக்காது. அரசியல் முன் அனுபவமோ, மக்கள் சேவை நோக்கமோ இல்லாத வேட்பாளர்கள் கூட, பெரிய சமூக செயற்பாட்டாளர்கள் போல உணர்ச்சிப் பேச்சுகளை அள்ளி வீசுவார்கள்.

நாட்டின் அரசியல் கலாசாரத்தில் எந்தளவுக்கு மக்கள் வெறுப்படைந்திருக்கின்றார்கள் என்பதையும், பொருளாதார நெருக்கடியும் வாழ்க்கைச் சுமையும் எங்கெங்கெல்லாம் தாக்கம் செலுத்தியிருக்கின்றது என்பதையும் வேட்பாளர் தெரிவு நடைமுறைகளில் நன்றாகவே அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக, முஸ்லிம் பிரதேசங்களில், சில உள்ளூராட்சி மன்றங்களின் ஒரு சில வட்டாரங்களுக்கு போட்டியிட பல வேட்பாளர்கள் முன்வந்த போதிலும், அநேக வட்டாரங்களில் ஒரு பொருத்தமான வேட்பாளரைத் தேடிப் பிடிப்பதே கட்சிகளுக்கு பெரும்பாடாக அமைந்திருந்தது.

இதனால், ஒரு வேட்பாளராக நிற்பதற்கான இலட்சணங்கள் இல்லாத பலர், வழக்கத்தை விட அதிக எண்ணிக்கையில் இம்முறை களமிறக்கப்பட்டுள்ளனர். வட்டாரத்தில் உள்ள மக்களால் அறியப்படாதவர்கள், எம்.பியின் அல்லது கட்சித் தலைவரின் எடுபிடிகள் வேட்பாளர்களாகப் பெயரிடப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி, ஒரு கட்சியில் போட்டியிட ஆசனம் கிடைக்காதவர்கள் ‘கூடுவிட்டுக் கூடுதாவி’ வெட்கமற்று, மற்றைய கட்சிகளில் போட்டியிடுகின்றனர்.

தமது சொந்த வட்டாரத்தில் அல்லாமல் வேறு வட்டாரத்தில் போட்டியிடுபவர்கள், பொழுதுபோக்காக முன்வந்தவர்கள், வெளிநாடு போவதற்கு வாய்ப்பாக தேர்தலை பயன்படுத்த முனைவோர் எனப் பல இரகமானவர்களை காணமுடிகின்றது.

முஸ்லிம் பிரதேசங்களில் ஒரு வட்டாரத்துக்குள் ஐந்தாறு கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. ஜனநாயகம் என்ற போர்வையில் களமிறங்கியுள்ள கணிசமான வேட்பாளர்களைப் பார்க்கின்ற போது, சிரிப்பதா அழுவதா எனத் தெரியவில்லை. இவர்கள் எல்லாம் வட்டாரத்தை, பிரதேசத்தை ஆளும் அளவுக்கு நாம் வந்துள்ளோமா என எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள 339 உள்ளூராட்சி சபைகளில், தேர்தல் வேலைகள் களைகட்டிக் கொண்டிருக்க, இரண்டு உள்ளூராட்சி சபைகள் எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றி ஒய்ந்து கிடக்கின்றன.

ஒன்று, இன்னும் பதவிக்காலம் முடிவடையாத எல்பிட்டிய பிரதேச சபை; இரண்டாவது, நீதிமன்றத்துக்குச் சென்றுள்ள கல்முனை மாநகர சபை எனபவையாகும்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் உள்ளடங்குகின்ற சாய்ந்தமருது பிரதேசத்துக்குத் தனியான ஓர் உள்ளூராட்சி சபையை பிரகடனப்படுத்தும் வர்த்தமானி ஏற்கெனவே வெளியாகியிருந்த நிலையில், அதனை இன்னுமொரு வர்த்தமானி ஊடாக இரத்துச் செய்யாமல், சாய்ந்தமருது பிரதேசத்தை கல்முனை மாநகர சபைக்குள் வரும் வட்டாரங்களாக அறிவித்துள்ளமையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு அமைய நீதிமன்றம், வேட்புமனுக்களை ஏற்க தடை விதித்துள்ளது.

ஏ.எல்.எம் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தரும் கடந்த முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டவருமான ஓய்வுநிலை அரச நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்ச லீம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். முதலில், 19ஆம் திகதி வரை வேட்புமனுத் தாக்கல் செய்ய தடை விதித்திருந்த நீதிமன்றம், பின்னர், தீர்ப்பு வரும் வரை அத்தடையை நீட்டித்திருக்கின்றது.

கல்முனை மாநகர சபை என்பது, கிழக்கு மாகாணத்தில் உள்ள மிக முக்கியமான உள்ளூராட்சி சபைகளில் ஒன்றெனலாம். இதற்குள் மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் அதற்கடுத்தபடியாக தமிழர்களும் இங்கு வசிக்கின்றனர்.

கல்முனை நகரம் ‘கிழக்கின் முகவெற்றிலை’ என்ற அடைமொழியில் அழைக்கப்படுவதை அறிவோம். ஆயினும், ஏ.ஆர் மன்சூர், எம்.எச்.எம். அஷ்ரபுக்குப் பின்னர் வந்த தலைவர்கள், குறிப்பாக, எச்.எம்.எம்ஹரீஸ் போன்றவர்கள், கல்முனையின் இருப்பையும் வளர்ச்சியையும் திட்டமிட்டு, மூலோபாய அடிப்படையில் மேற்கொள்ளவில்லை என்பது இன்னுமோர் அவதானிப்பாகும்.

கல்முனையில் இருந்து தனியான ஒரு பிரதேச செயலகத்தை பிரித்துத் தருமாறு தமிழ் மக்கள் கோரி வருவது ஒருபுறமிருக்க, சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபை வேண்டும் என்று பல வருடங்களாக சாய்ந்தமருது மக்கள் போராடி வருகின்றனர்.

குறிப்பாக, உள்ளூராட்சி சபை பிரச்சினையை காதும் காதும் வைத்தாற்போல், நுணுக்கமான முறையில் அணுகி தீர்த்து வைக்க, இங்குள்ள முஸ்லிம் தலைவர்கள், தவறியதன் விளைவாகவே, இன்று நீதிமன்றம் வரை இது சென்றுள்ளது.

சாந்தமருதுக்கு உள்ளூராட்சி சபையைப் பெறுவதற்காக 2005-2010 காலப்பகுதியில் சில நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எல்லாம் கைகூடி வரும் நிலையில், இப்பகுதி மக்களின் கட்சிசார் அரசியல் நிலைப்பாடுகளால், அது கைநழுவிப் போனதாக கூறப்படுவதுண்டு.

2011 உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் பின்னர், சாய்ந்தமருதைச் சேர்ந்த சிராஸ் மீராசாகிபு, கல்முனை மாநகர சபையின் மேயராக கடும் பிரயத்தனங்களுக்குப் பிறகு நியமிக்கப்பட்டார். பின்னர் அவர், அப்பதவியில் இருந்து தூக்கப்பட்டு, கல்முனையைச் சேர்ந்த நிசாம் காரியப்பர் மேயராக அறிவிக்கப்பட்டார்.

இதன் பின்னர்தான் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை பெற்றெடுப்பதற்கான இரண்டாம் கட்ட மக்கள் போராட்டம் ஆரம்பமானது. சாய்ந்தமருது மக்களின் ஜனநாயக உரிமை, பிரதேச வளர்ச்சி, கல்முனை மாநகர சபை மீதான திருப்தி, சிராஸ் மீராசாகிப் போன்றோரின் அரசியல், பிரதேசவாதம், அரசியல்வாதிகளின் போக்கு எனப் பல காரணங்கள் இதில் செல்வாக்குச் செலுத்தின.

சாய்ந்தமருது பள்ளிவாசலை மையமாகக் கொண்டு, நீண்ட நாள்களாக வெகுஜன முன்னெடுப்புகள் இடம்பெற்றன. உள்ளூராட்சி சபை கோரிக்கையை முன்னிலைப்படுத்தி, ராஜபக்ஷர்களை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுக்கக் கூட சாந்தமருது பின்வாங்கவில்லை.

முன்னதாக, உள்ளூராட்சி சபை தருவதாக பல அரசியல்வாதிகள், பிரதமர் கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில். ஒரு கட்டத்தில் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா, சாய்ந்தமருது மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

இவ்வாறிருக்கையில், 2019ஆம் ஆண்டு சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியான ஒரு உள்ளூராட்சி சபையை பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது. இது சமூக வலைத்தளங்களில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டதையடுத்து, சாய்ந்தமருது மக்கள் சற்று அவசரப்பட்டு, கொண்டாடத் தொடங்கி விட்டனர் என்றுதான் கூற வேண்டியுள்ளது.

இந்நிலையில், அந்த வர்த்தமானி அறிவித்தல் இடைநிறுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்தது. முன்னைய அறிவித்தலை ஒரு வர்த்தமானி ஊடாக வாபஸ் பெறாமல், அரசாங்கம் வெறும் வாயால் இதனை மறுத்து விட்டு, கடந்து சென்று விட்டது. இதற்குப் பின்னால், கல்முனை அரசியல்வாதிகள் இருந்திருப்பார்கள் என்பது அப்போதே பேச்சடிபட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்ட காலமாக அது இருந்ததாலும், ராஜபக்ஷர்கள் தலைகால் புரியாமல் அதிகார வேட்கையில் ஆடிக் கொண்டிருந்தமையாலும், இவ்விவகாரம் அப்படியே அடங்கிப் போனது.

ஆனால், இந்த ஓட்டையைப் பயன்படுத்தியே ஏ.எல்.எம் சலீம், சந்தர்ப்பம் பார்த்து ஓர் ஆப்பை சொருகியுள்ளார். தேசிய காங்கிரஸ் தலைவருக்கு தெரியாமல், இது நடந்திருக்குமா என்பது சந்தேகமே.

கல்முனை மாநகர சபைக்கான வேட்புமனுக்களை ஏற்பதற்கு, தீர்ப்பு வழங்கப்படும் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. வேட்புமனுத் தாக்கல் ஏற்கெனவே முடிவடைந்து விட்டதால், பிறிதொரு கட்டமாகவே கல்முனைக்குள் வரும் வட்டாரங்களுக்கான வேட்புமனுத்தாக்கலும் வாக்களிப்பும் இடம்பெறவுள்ளது.

நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பைப் பொறுத்து, இங்கு தேர்தல் இடம்பெறும். அதாவது, ஏற்கெனவே வெளியான வர்த்தமானிக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில் தீர்ப்பு அறிவிக்கப்படுமாயின், கல்முனை மாநகர சபைக்கும், சாய்ந்தமருது உள்ளூராட்சி சபைக்கும் தனித்தனியாக, ஒரே தினத்தில் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளது.

அல்லது, தனியான உள்ளூராட்சி சபைக்கான அறிவித்தல் சட்டவலுவற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பெழுதுமாக இருந்தால், வழக்கம்போல கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசமாகவே சாய்ந்தருதிலும் தேர்தல் நடைபெறும்.

தமது ஊரின் உரிமைக்காக ஒருவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால், இந்த விவகாரம் பூதாகரமாகி, நீதிமன்றம் வரை செல்வதற்கு காரணகார்த்தாக்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள். இதனையெல்லாம் தாண்டி, இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துகளும் இல்லை.

இந்த நீதிமன்ற நடவடிக்கையால் சாய்ந்தமருது மக்கள் உற்சாகமடைந்துள்ளனர். தமது முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்பது போல, சமூக வலைத்தளங்களில் கொண்டாடுவதையும் காண முடிகின்றது. ஆனால், இதற்கு ஒரு மறுபக்கமும் உள்ளது.

அதாவது, கல்முனை நகர சபையின் கீழ் மூன்று ஊர்கள், இரண்டு சமூகங்கள் உள்ளடங்குகின்றன. இந்தத் தடையால், கல்முனையில் உள்ள அப்பாவி வாக்காளர்கள் மற்றும் மருதமுனை மக்களும் மார்ச் 9 தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஒரு முடிவு கிட்டிய பிறகுதான், சாய்ந்தமருது வட்டாரங்களிலும் மக்கள் தேர்தலை சந்திக்க முடியும்.

கல்முனையும் சாய்ந்தருதும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் போன்ற ஊர்களாகும். மிக அந்நியோன்னியமாக, சமரசமாகப் பேசி இவ்விடயத்தை தீர்த்து வைத்திருக்க முடியும். ஒரு சர்வதேச விவகாரம் போல இதனை வைத்து, ‘அரசியல் படம்’ காட்டுவதை விடுத்து, காதும் காதும் வைத்தாற்போல் காரியமாற்றியிருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியத்தை, இரு பக்கத்தில் உள்ளவர்களும் அரசியல் இலாபம், ஆட்புல எல்லை உள்ளிட்ட காரணங்களுக்காக ஊதிப் பெருப்பித்ததால், இன்று இந்த விவகாரம் நீதிமன்றத்தில் வந்து நிற்கின்றது. இனியென்ன, நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை காத்திருப்பதை தவிர வேறென்ன செய்யலாம்?

## கடிதங்கள்

### மழையால் அறுவடைகள் பாதிப்பு

அறுவடை நேரத்தில் மழை பெய்வதால் கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களின் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது காலபோக நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், திடீர் திடீரென மழை பெய்வதன் காரணமாக, அறுவடை மேற்கொள்வதில் விவசாயிகளால் நெருக்கடி எதிர்கொள்ளப்படுகின்றது.

மழை இல்லாத நேரத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை உலர வைப்பதிலும் சிரமங்கள் காணப்படுகின்றது. இதேவேளை, அறுவடை செய்யப்பட்ட நெல்லை விற்பனை செய்யும்போதும் விவசாயிகள் நட்டத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கிறார்கள்.

குறிப்பாக, குறைந்த விலையில் தனியாரால் நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் நெல்லுக்கு நியாயமான விலை பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதேவேளை, கிராமங்களில் போதியளவு நெல் உலரவிடும் தளங்கள் இல்லாததன் காரணமாக, பச்சை நெல்லாக விற்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். கிராமங்களில் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# கங்கனாவின் அடமானம்



மறைந்த இந்திய பிரதமர் இந்திரா காந்தி வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகும் 'எமர்ஜென்சி' படத்துக்காக தனது அனைத்து சொத்துகளையும் அடமானம் வைத்ததாக நடிகை கங்கனா தெரிவித்துள்ளார்.

தமிழில் 'தாம்தூம்', ஜெயலலிதா வாழ்க்கை கதையான 'தலைவி' படங்களில் நடித்து பிரபலமான கங்கனா ரணாவத், இந்தியில் முன்னணி கதாநாயகியாக இருக்கிறார். சமூக வலைத்தளங்களில் சர்ச்சை கருத்துகள் வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தி, இதனால் வழக்குகளையும் சந்திக்கிறார்.

தற்போது மறைந்த பிரதமர் இந்திராகாந்தி வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகும் 'எமர்ஜென்சி' படத்தில் நடிக்கிறார். இந்த படத்தை அவரே இயக்குகிறார். இந்திரா காந்தி - கங்கனா ரணாவத் இந்திரா காந்தி ஆட்சியின் நெருக்கடி நிலை பிரகடனத்தை படத்தில் காட்சிப்படுத்த உள்ளனர்.

இந்நிலையில் இப்படம் குறித்து கங்கனா ரணாவத் கூறும்போது, "எமர்ஜென்சி படப்பிடிப்பை முடித்து விட்டேன். எனது வாழ்க்கையின் பெருமையான தருணம் இது. ஆனாலும் படத்தை சுகமாக முடித்து விடவில்லை. படத்தை முடிக்க எனது அனைத்து சொத்துகளையும் அடமானம் வைத்தேன். இது எனக்கு மறுபிறவி மாதிரி. சொத்தை அடமானம் வைத்ததை வெளியே சொல்லவில்லை. உங்கள் கனவுகள் நிறைவேற கடினமாக உழையுங்கள்" என்று கூறியுள்ளார்.





# வசூல் மழையில் "அவதார் 2"

ஜேம்ஸ் கேமரூன் இயக்கிய பிரம்மாண்ட ஹொலிவுட் திரைப்படமான 'அவதார் - த வே ஆப் வோட்டர்' படம் டிசெம்பர் 16ம் திகதி வெளியானது. தொடர்ந்து வசூலைக் குவித்து வந்த படம் தற்போது 2 பில்லியன் டொலர் வசூலைக் கடந்துள்ளது.

இதன் மூலம் அதிக வசூலைக் குவித்த ஹொலிவுட் படங்களில் 6வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. முதல் 5 இடங்களில், "அவதார் 1, அவஞ்சர்ஸ் என்ட்கேம், டைட்டானிக், ஸ்டார் வார்ஸ் - த போர்ஸ் அவேக்கன்ஸ், அவஞ்சர்ஸ் இன்பினிட்டி வார்" ஆகிய படங்கள் உள்ளன.

'அவதார் 2' இதுவரையில், மொத்தமாக 2.04 பில்லியன் யுஎஸ் டொலர் வசூலித்துள்ளது. அமெரிக்கா மற்றும் கனடாவில் 598 மில்லியனும், உலக அளவில் 1.43 பில்லியனும் இப்படம் இதுவரை வசூலித்துள்ளது. குறைவான நாட்களில் 2 பில்லியன் டொலர் வசூலித்த இரண்டாவது படம் என்ற பெருமையையும் இப்படம் பிடித்துள்ளது.

# 'தளபதி 67' படத்தில் பகத் பாசில்?



விஜய் நடித்து வரும் 'தளபதி 67' படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது இரண்டாம் கட்ட படப்பிடிப்பு கொடைக்கானலில் நடைபெற்று வரும் நிலையில் அடுத்தகட்ட படப்பிடிப்பு காஷ்மீரில் நடைபெற இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்த படத்தில் ஏற்கனவே சஞ்சய் தத், அர்ஜூன், கௌதம் மேனன், மிஷ்கின் த்ரிஷா, மன்சூர் அலிகான் உள்ளிட்ட பல பிரபலங்கள் இணைந்துள்ள நிலையில் மேலும் சில நடிகர்கள் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்த வகையில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவான 'விக்ரம்' என்ற மாபெரும் வெற்றி படத்தில் நடித்த பகத் பாசில் 'தளபதி 67' படத்தில் நடிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசியபோது 'தளபதி 67' படத்தில் நீங்கள் இருக்கிறீர்களா? என கேட்ட கேள்விக்கு பதில் அளித்த பகத் பாசில், 'லோகேஷ் சினிமா யுனிவர்ஸ் என்ற அடிப்படையில் நானும் அந்த படத்தில் இருக்கலாம் என்று கூறினார்.

ஏற்கனவே 'கைதி' படத்தில் இடம்பெற்ற டெல்லி என்ற கேரக்டரும் 'தளபதி 67' படத்தில் இருக்கும் என்று கூறப்படும் நிலையில் தற்போது பகத் பாசிலும் இருக்கிறார் என்ற தகவல் இந்த படத்தை மிகப்பெரிய அளவிற்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 'ஏகே 62' பட அப்டேட் ரசிகர்கள் குஷி!



அஜித்தின் 'துணிவு' திரைப்படம் வெளியாகிய நல்ல வெற்றி பெற்ற நிலையில் அவர் நடிக்க இருக்கும் அடுத்த திரைப்படமான 'ஏகே 62' படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் லைகா நிறுவனத்தின் தயாரிப்பில் அனிருத் இசையில் உருவாகும் இந்த படம் மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஏற்படுத்தி உள்ளது.

இதுவரை விக்னேஷ் சிவன் முழுக்க முழுக்க ரொமான்ஸ் மற்றும் காமெடி படங்களையே இயக்கி வந்த நிலையில் அஜித்தை வைத்து அவர் இயக்கும் 'ஏகே 62' படம் என்னவாக இருக்கும் என்ற கேள்வி ரசிகர்கள் மனதில் எழுந்தது.

இந்த நிலையில் 'ஏகே 62' படத்தில் ரொமான்ஸ் மற்றும் ஆக்ஷன் ஆகிய இரண்டும் இருக்கும் என்றும் செய்திகள் கசிந்துள்ளன. இதனால் அஜித் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஏற்கனவே இந்த படத்தில் ஐஸ்வர்யா ராய் நடிகை இருப்பதாக கூறப்பட்ட நிலையில் இன்னும் என்னென்ன அப்டேட்டுகள் வெளிவரும் என்பதை பொருத்திருந்து பார்ப்போம்.



# 'கேப்டன் மில்லர்' தனுஷ்

தனுஷ் நடிப்பில் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'கேப்டன் மில்லர்'. இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது. கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமார், பிரியங்கா மோகன் உள்பட பலர் நடிப்பில் உருவாகி வரும் இந்த படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

ஜிவி பிரகாஷ் இசையில் உருவாகி வரும் இந்த படம் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில் இந்த படத்தின் மேக்கிங் வீடியோவை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

ஒரு நிமிடத்திற்கும் மேலாக இருக்கும் இந்த வீடியோவில் படப்பிடிப்பிற்காக பிரமாண்டமாக செட் போடும் காட்சிகள் உள்ளன. மேலும் வீடியோவின் இறுதியில் கையில் துப்பாக்கி உடன் தனுஷ் ஆவேசமாக இருக்கும் காட்சி உள்ளன.

அந்தமான்

# 21 தீவுகளுக்குப் பெயர் சூட்டினார் மோடி



இந்திய சுதந்திர போராட்ட வீரர் 'நேதாஜி சுபாஷ் சந்திரபோசின்' பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், நேற்றைய தினம் ( 23) 'பராக்கிரம தினமாகக்' கொண்டாடப்படும் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில் இதனை மேலும் சிறப்பிக்கும் வகையில் நேற்றைய தினம் , அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் உள்ள பெயர் சூட்டப்படாத 21 தீவுகளுக்கு, 'பரம்வீர் சக்ரா விருது' பெற்றவர்களின் பெயர்களைப் பிரதமர் மோடி சூட்டினார்.

அந்தவகையில் 'மேஜர் சோம்நாத் ஷர்மா, நாயக் ஜதுநாத் சிங், மேஜர் பிரு சிங், ஆல்பெர்ட் எக்கா, மேஜர் ராமசுவாமி பரமேஸ்வரன், கேப்டன் விக்ரம் பத்ரா, லெப்டினென்ட் மனோஜ் குமார் பாண்டே உள்ளிட்ட 21 பேரின் பெயர்கள் இதில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மகாராஷ்டிரா

## ஒருவருக்கு மட்டும் இயங்கும் பாடசாலை

மகாராஷ்டிரா மாநிலம் கணேஷ்புர் கிராமத்தில், ஒரேயொரு மாணவனுக்காக பாடசாலையொன்று இயங்கி வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 150 பேர் வாழ்ந்து வரும் குறித்த கிராமத்தில், கடந்த 2 வருடங்களாக குறித்த மாணவன் மாத்திரம் பாடசாலைக்குச் சென்று வருகின்றான். குறித்த மாணவனுக்காக 'கிஷோர் 'என்ற ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், அவர் அம்மாணவனுக்கு அனைத்துப் பாடங்களையும் கற்றுக் கொடுக்கின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பீகார்

## வயதான ஆசிரியரைத் தாக்கிய பெண் பொலிஸ் அதிகாரிகள்

பீகாரில் வயதான பாடசாலை ஆசிரியர் ஒருவரை, இரு பெண் பொலிஸ் அதிகாரிகள் தடியால் கடுமையாகத் தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கைமூர் மாவட்டத்தைச் சேர்ந்த 70 வயதான 'நாவல் கிஷோர் பாண்டே' என்ற ஆசிரியரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று கடை வீதிக்குச் சென்ற அவர்,கீழே விழுந்த தனது சைக்கிளை எடுக்கத் தாமதம் ஆனதால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும், இதனால் ஆத்திரமடைந்த இரு பெண் பொலிஸ் அதிகாரிகளும் ஆசிரியரைத் தடியால் சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அப்பெண் பொலிஸ் அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென பீகார் காவல் துறை தெரிவித்துள்ளது.

சென்னை,


## சசிகலாவுக்கு எதிரான மனு தள்ளுபடி


அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அதிமுக) பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து சசிகலா, சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுவை ரத்து செய்யக்கோரி தமிழக எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தரப்பு ஆதரவாளர் செம்மலை உச்ச மனு தாக்கல் செய்தார்.




ஒடிசா

# ஒடிசாவில் பிரமாண்டம்



இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போசின் 126ஆவது பிறந்த தினம் நேற்றைய தினம் (23) நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், ஒடிசா மாநிலத்தின், புரி கடற்கரையில் பிரபல மணல் சிற்பக் கலைஞரான 'சுதர்சன் பட்நாயக்', நேதாஜியை கௌரவிக்கும் விதமாக நேதாஜியின் பிரம்மாண்ட மணல் சிற்பமொன்றை உருவாக்கியுள்ளார்.

அத்துடன் இச்சிற்பத்துக்குப் பின்னால் சுமார் 450 இரும்புக் கிண்ணங்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார்.



# இந்திய கடற்படையில் 'ஐ.என்.எஸ் வகிர் '

இந்தியக் கடற்படையில் நேற்றைய தினம்(23) ஐ.என்.எஸ் வகிர் (INS vagir) என்ற நீர் மூழ்கிக் கப்பலொன்று புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையில் தற்போது 150-க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்களும், 17 நீர்மூழ்கி கப்பல்களும் உள்ளன.

இதில் 2 நீர்மூழ்கி கப்பல்கள் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை. கடந்த 2005ஆம்ஆண்டில் பிரான்ஸின் நேவல் குரூப் நிறுவனத்துடன் இணைந்து 6 புதிய நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது.

இதன்படி கடந்த 2007ஆம்ஆண்டில் மும்பை கட்டுமான தளத்தில் நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கும் பணி தொடங்கியது.

முதல் நீர்மூழ்கியான ஐஎன்எஸ் கல்வாரி கப்பல் 2017ஆம் ஆண்டு கடற்படையில் சேர்க்கப்பட்டது. இதனையடுத்து 2019-ஆம் ஐஎன்எஸ் காந்தேரி, 2021ஆம்ஆண்டில் ஐஎன்எஸ் கரஞ்ச், ஐஎன்எஸ் வேலா ஆகியவை அடுத்தடுத்து கடற்படையில் இணைக்கப்பட்டன.

இந்நிலையில் தற்போது 5ஆவது நீர்மூழ்கியான ஐ.என்.எஸ் வகிர் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை

# கைத் தொலைபேசி பறிப்பு; பயணி உயிரிழப்பு



சென்னையில் ரயிலில் பயணிக்கும் பயணிகளைத் தாக்கி அவர்களது கைத்தொலைபேசிகளை, திருடர்கள் பறிக்கும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த 20 ஆம் திகதி கோரமண்டல் விரைவு ரயிலிலும் இதே போன்ற சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த ரெயிலின் படிக்கட்டில் உட்கார்ந்து தொலைபேசியைப் பார்த்தபடி பயணம் செய்த வட மாநில இளைஞரின் கையில் இருந்து தொலைபேசியைப் பறிப்பதற்காகச் சிலர் குறித்த இளைஞரைக் கட்டையால் தாக்கியுள்ளனர்.

இதனை சற்றும் எதிர்பார்க்காத இளைஞர், நிலை தடுமாறி ரயிலில் இருந்து கீழே விழுந்ததில் தலை உடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் 24 வயதுடைய ரோனி சேக் எனக் கூறப்படுகின்றது.

இன்று மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி:

# இந்தியாவுக்கெதிராக ஆறுதல் வெற்றி பெறுமா நியூசிலாந்து?




இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது இந்தூரில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்று தொடரை இந்தியா கைப்பற்றியுள்ள நிலையில், சிரேஷ்ட வீரர்களான அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, மொஹமட் ஷமி மற்றுக் குல்தீப் யாதவ் உள்ளிட்டோருக்கு ஓய்வளிக்கப்பட்டு ஸ்ரீகர் பரத், ரஜாட் பட்டிடார், உம்ரான் மலிக், யுஸ்வேந்திர சஹால் உள்ளிட்டோருக்கு வாய்ப்பளிக்கப்படலாம்.

மறுபக்கமாக நியூசிலாந்தைப் பொறுத்த வரையில் ஹென்றி நிக்கொல்ஸ், ஹென்றி ஷிப்லே உள்ளிட்டோருக்குப் பதிலாக மார்க் சப்மன், ஜேக்கப் டஃபி உள்ளிட்டோர் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், உலகக் கிண்ணமானது இவ்வாண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில் பின் அலென் போன்றோர் விரைவில் ஓட்டங்களைப் பெற வேண்டியது அவசியமாகிறது.



## பெண்களுக்கான கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு பயிற்சி செயலமர்வு

வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி செயலமர்வு கல்லடியில் அண்மையில் நடைபெற்றது.

மட்டுவில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தி வலுவூட்டுவதற்காக செரி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

மண்முனை வடக்கு, வாழைச்சேனை, செங்கலடி, காத்தான்குடி ஆகிய பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 சிறுவர் கழகங்களைச் சேர்ந்தவர்களுக்கும், சிறுவர் நன்னடத்தை மேம்பாட்டு பிரிவினர், தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள் அதிகாரிகளுக்கும் இந் நிகழ்வில் பயிற்சி வழங்கப்பட்டுவருகின்றது.

கிரிக்கெட் விளையாட்டின் துடுப்பாட்ட நுட்ப முறைகள் மற்றும் துடுப்பாட்ட பயிற்சி, வேகப்பந்து, சுழல் பந்து முறைகள் பற்றியும் களத்தடுப்பாட்ட நுட்பங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் பி.கே. அன்வர்டின் மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபையின் முதலாம் தர பயிற்று விப்பாளர் கே. சகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## யுனைட்டெட்டை வென்றது ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, எடி நிகிட்டியா இரண்டு கோல்களையும், புகாயோ ஸாகா ஒரு கோலையும் பெற்றனர். யுனைட்டெட் சார்பாக, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், லிஸான்ட்ரோ மார்டினெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்திலுள்ளது. நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 39 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், அதே புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் யுனைட்டெட் நான்காமிடத்திலும் உள்ளது. இதில், ஏனைய அணிகளை விட ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்ட கர்சியா அவுஸ்திரேலிய பகிரங்க

டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் நான்காம் நிலை வீராங்கனையான கரோலின் கர்சியா வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில் போலந்தின் மக்டா லினெட்டையை எதிர்கொண்ட பிரான்ஸின் கர்சியா, 6-7 (3-7), 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.



சிரியா

# கட்டடம் இடிந்து விழுந்து 16 பேர் உயிரிழப்பு

சிரியாவில் ஐந்து மாடிக் குடியிருப்புக் கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் அலெப்போ நகரில் நேற்று முன்தினம் (22) இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தில் உள்ள வீடுகளில் சுமார் 30 பேர் வசித்து வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று குறித்த கட்டடம் திடீரென இடிந்து விழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதில் இடிபாடுகளுக்குள் சிக்கி 16 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 4 பேர் படுகாயங்களுக்குள்ள நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் குறித்த கட்டடத்தின் அடித்தளமானது தண்ணீர் கசிவு காரணமாக நீண்ட நாட்களாகப் பலமிழந்து காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








சீனா

## அதிரடி காட்டும் சீனா

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், அண்மைக்காலமாக சீனாவிலுள்ள விவசாய நிலங்கள் உயர்தர விவசாய நிலங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் உயர்தர பாசன வசதிகள், விவசாயத் தேவைகளுக்கு மின் பகிர்மானம் என பல்வேறு சிறப்பம்சங்களுடன் இந்த உயர்தர விவசாய நிலங்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்த ஒரு ஆண்டில் மாத்திரம், 74 லட்சம் ஏக்கர் உயர்தர விவசாய நிலங்களை அமைக்க திட்டமிட்ட சீனா, நிர்ணயித்த இலக்கை விட அதிகமாக, ஒரு கோடியே 73 லட்சம் ஏக்கர் உயர்தர விவசாய நிலங்களை அமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா


## வீட்டுக்கு வீடு விமானம்

அமெரிக்காவில், கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ‘கேமரான் ஏர் பார்க்‘ என்ற நகரில் வீட்டுக்கு வீடு விமானங்கள் உள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க மக்களால் ‘விமான பார்க் நகரம்‘ என அழைக்கப்படும் குறித்த நகரில் ஒவ்வொருவரது வீட்டு வாசலிலும் சிறிய வகை விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும், அவர்கள் பெரும்பாலும் போக்குவரத்திற்கு விமானங்களையே பயன்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நகரில் உள்ள தெருக்களும் விமானத்தில் செல்ல உதவும் விதமாக மிகவும் பரவலாக அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இருப்பினும் அப்பகுதிக்கு அனுமதியின்றி வெளியாட்கள் பிரவேசிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



போஸ்னியா

## பிளாஸ்டிக் நதியாக மாறிய ‘ட்ரினா‘

போஸ்னியாவில்(Bosnia) உள்ள புகழ்பெற்ற ‘ட்ரினா நதியானது பிளாஸ்டிக் கழிவுகளால் கடுமையாக மாசடைந்துள்ள நிலையில், இது குறித்து வெளியான புகைப்படங்கள் சமூக ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் மாண்டினீக்ரோ மற்றும் போஸ்னியாவில் பெய்த கனமழையால் ட்ரினா நதியின் நீர்மட்டமானது உயர்வடைந்தது.

இதனால் நதியின் ஒரு பகுதி முழுவதும் கழிவுகள் சூழ்ந்து மிகவும் மோசமாகக் காட்சி அளிக்கின்றது.

இந்நிலையில் ட்ரினா நதியால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியா

## முடிசூட்டு விழாவில் நிகழப்போகும் மாற்றம்



பிரித்தானியாவின் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடி சூட்டு விழாவில் பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தபாரம்பரிய நிகழ்வொன்று இம்முறை கைவிடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவின் மன்னர் மற்றும் ராணியாக மூன்றாம் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமிலா, மே 6திகதி முடிசூடவுள்ளனர்.

இந்நிலையில் மன்னர்கள் பதவியேற்கும் சமயத்தில் அணிந்துகொள்ளப்படும் பாரம்பரியமான அரச உடையை அணிந்து கொள்ளும் பழக்கத்தை மன்னர் கைவிடவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ சீருடையை அணியவுள்ளார் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.




சோமாலியா

## மேயர் அலுவலகம் அருகே குண்டுவெடிப்பு; 6 பேர் உயிரிழப்பு

சோமாலியா தலைநகர் மொகதீசுவில் மேயர் அலுவலகம் அருகே நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

அண்மையில் கல்கட் நகரை கைப்பற்றும் நோக்கில், அங்குள்ள இராணுவ முகாமை சூழ்ந்து கொண்டு 100-க்கும் மேற்பட்ட அல்-ஷபாப் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

தொடர்ந்து, இராணுவ முகாமிற்குள் புகுந்து 7 வீரர்களைப் படுகொலை செய்தனர். தகவலறிந்து, அமெரிக்க படைகள் நிகழ்த்திய வான் தாக்குதலில், 30 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் இதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே பயங்கரவாதிகள் குறித்த குண்டுவெடிப்புத் தாக்குதலை நிகழ்த்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 24 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.